# படல் பன்றி

பெ. செல்வகுமார்


ஓவியம்: ஜே.கே.

**தொ**ழுவத்தின் பன்றியென
நீ வழங்கிய பொழுதுகளை
வாழ்வென தம்பட்டமடிக்கிறாய்
உடைந்த முட்டைகளின்
கவிச்சமடிக்கும் தின்பண்டங்களை
வீசியெறிகிறாய்
அருவருக்கும்படியாய்
என்மேல் தெறிக்கும்படி
எனது தொட்டிக்கருகிலேயே
மூத்திரம் பெய்கிறாய்
பிணைக்கப்பட்ட சங்கிலிகளின்
உரசலைப் போன்றிருக்கின்றன
உனது பித்தமேறிய சொற்கள்
குட்டிகள் சப்பித் தொங்கிய
காம்புகளில் படிந்திருக்கிறது
உனது காமம் பீய்ச்சிய ஈரம்
நீ சிந்தும் துளிகளின் முனை
விஷமேறி மினு மினுக்கிறது
சாக்கடை மேவிய காட்டில்
பீத் தின்ற நேரம் போக
மூங்கில் படலடைத்தக் கொட்டடியில்
ஆண் பன்றியென நீ
சொல்லித் திரிவதைத்தான் என்னால்
சகிக்க முடியவில்லை.